IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.137/2010
DEPOSITION OF WITNESS

வா.சா. 1சாட்சி ரமேஷ்பாண்டி த.பெ.முருகேசன்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 23.02.2026 in accordance with the provisions of Act XX141.**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

1. சர்வே எண். 169/1 ல் செண்டு 86 ல் தென்புறத்தின் மையம் ச.அடி 2825 கொண்ட காலி மனையிடத்தை எந்த பத்திரத்தின் அடிப்படையில் கிரையம் பெற்றுள்ளீர்கள் என்ற விபரம் நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எந்த பத்திரத்தின் அடிப்படையில் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் மூல பத்திரத்தின் அடிப்படையில் கிரையம் பெற்றேன். நான் சொல்லும் மூல பத்திரம் 7 செண்டு குறிப்பிட்டுள்ளது, ஆனால் வாதி கிரையம் பெற்றுள்ளது 6 1/2 செண்டு ஆகும் என்றால் சரிதான். 6 1/2 செண்டு எந்த வருடம் கிரையம் பெற்றேன் என்றால் 1997 ஆண்டு கிரையம் பெற்றேன்.

2. பிரதிவாதிகள் எனக்கு முன் வந்தவர்களா அல்லது பின் வந்தவர்களா என்றால் அவர்களது பூர்வீக சொத்து ஆகும். முதலில் வீடு கட்டியது யார் என்றால் பாத்துரூம் இல்லாமல் பிரதிவாதிகள் வீடு கட்டியுள்ளார்கள். பாத்துரூம் எந்த வருடம் கட்டினார் என்றால் 6 வருடத்திற்கு முன்பே கட்டியுள்ளார்கள். வாக்குவாதம் நடைபெற்றது என்றால் நடைபெற்றது. வாக்குவாதம் சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லையா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது

தகப்பனாரின் செயல்பாடு.

3. மேற்படி விபரங்கள் தெரிந்து எந்த நீதிமன்றத்திலும் வழக்கு தொடரவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையாளர் தாக்கல் செய்த ஆணையர் அறிக்கையை படித்து பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். ஆணையர் அறிக்கை தாக்கல் செய்யும் போது அனுபவம் மற்றும் கிரைய பத்திரத்தின் அடிப்படையில் மற்றும் பத்திரத்தின் படி 2 FMB வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதில் 3 இலக்க சொத்துக்களில் எவ்வித ஆக்கிரமிப்பு இல்லை என்றும் 1/2 அடி அளவிலான வித்தியாசங்கள் இயற்க்கையாக வருவது என்றும் தெரிவித்துள்ளார் என்றால் சரியல்ல. அவர்கள் பிரதிவாதியின் குடியிருப்பு எல்லையை வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை.

4. மேற்படி வழக்கில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகத்தான் வழக்கு பிரதிவாதிகளின் சொத்திற்கு விஸ்தீரணம் மற்றும் அளவு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் மூல பத்திரத்தின் படி FMBன் ஆணையர் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. 26.12.2009ம் தேதியன்று சர்வேயர் வைத்து அளந்து பார்த்தபோது தாவா சொத்தின் தெற்கு பகுதியில் சுமார் 150 ச.அடி நீளவாக்கீல் பிராது வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளDEF பகுதியை சட்டத்திற்கு விரோதமாக ஆக்கிரமித்து கட்டியுள்ளார்கள் அந்த அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சர்வேயர் வாய்மொழி மூலமாக மூல பத்திரத்தினை அடிப்படையாக கொண்டு கூறப்பட்டது.

5. கடந்த 27.02.2010 தேதியில் சொத்தை ஆக்கிரமிப்பதாக கூறி திருநகர் காவல் நிலையத்தில் பிரதிவாதிகள் மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் என் தந்தை புகார் கொடுத்தார். அந்த புகார் மனுவை நீதிமன்றத்தில்

தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. மேற்படி சம்பவம் எதுவும் நடக்கவில்லை வழக்கிற்காக பொய்யான சங்கதிகளை கூறி காலவரை சட்டத்தில் இருந்து தப்பித்துக்கொள்ள பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை, பொய்யான சங்கதிகளை கூறி வீண் அலைக்கழிப்பு செய்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.23 14:29:09 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.